# திருமண வாழ்த்து! (நாள்: 21-08-2020)

மெத்த சீர்ப் பெருமை கொள்ள
　　மேதினியின் இன்பம் சூழ,
மத்தளம் முழங்க வரிசங்கம்
　　நின்றோத செல்வி **நிவேதா**வை
கைத்தலம் பற்றுவான் செல்வன்;
　　**இரமேஷ்** என்னும் **ஐயப்பன்**,
இத்திருநாள் தன்னில் இமையவர்
　　யாவரும் வாழ்த்துக் கூற,

முத்திரைப் பதிக்கும் வாழ்வு
　　முடிவிலாக் கீர்த்தியோடு,
பத்தரை மாற்றுப் பொன்னாய்
　　பலரும் போற்றக் கொண்டு
இத்தரைச் சூழும் வாழ்வில்,
　　ஈடில்லா மகிழ்வு தன்னைச்
சொத்தாய்க் கொண்டு வாழ்வீர்!
　　சுகங்களைக் கையில் ஏந்தியே!



அன்புடன்,

**கு. ப. அசோகன் - மங்கையர்க்கரசி**

**சென்னை-73**